வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 16.3.2026 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ள 5 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் மாதிரி நடத்தை நெறிமுறைகளை கடுத்தமாக அமல்படுத்த தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.
- புதுச்சேரியில் சட்டமன்ற தேர்தலுக்கான, தேர்தல் அறிவிக்கை இன்று வெளியிடப்பட்டு, வேட்புமனுதாக்கல் தொடங்கி உள்ளது.
- தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.
- ஒடிசா மாநிலம் கட்டாக் மருத்துவமனையில், தீவிபத்தில் பல உயிர்கள் பலியானது குறித்து, குடியரசு தலைவர் பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் துயரம் வெளியிட்டுள்ளனர்.

<u>தேர்தல் நெறிமுறை</u>

சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ள 5 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் இடைத் தேர்தல் நடைபெற உள்ள 6 மாநிலங்களிலும், தேர்தலுக்கான மாதிரி நடத்தை நெறிமுறைகளை கடுத்தமாக அமல்படுத்த சம்பந்தப்பட்ட தலைமைச் செயலர்கள் மற்றும் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு, தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. அரசு மற்றும் தனியார் கட்டிடங்களில் இருந்து சுவர் விளம்பரங்களை நீக்கவும், அரசு வாகனங்கள் மற்றும் விருந்தினர் இல்லங்கள் தவறாக

பயன்படுத்தப்படுவதை தவிர்க்கவும் நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அரசுச் செலவில் விளம்பரங்களை வெளியிடவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள் தங்களின் அலுவல்பூர்வ கடமைகளை தேர்தல் பிரசாரத்துடன் இணைத்துக் கொள்ளக் கூடாது என்றும் அரசு இயந்திரம், அரசுப் போக்குவரத்து, மற்றும் அரசு ஊழியர்களை பிரச்சாரப் பணிகளில் ஈடுபடுத்தப்படக் கூடாது என்றும் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தி உள்ளது. தேர்தல் நெறிமுறைகள் மீறப்படுவதாக தெரிய வந்தால், பொது மக்கள், EC-NET அல்லது C-Vigil மொபைல் செயலி மூலம் தேர்தல் ஆணையத்திற்கு தெரிவிக்கலாம் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. இதுதொடர்பான புகார்கள் மீது 100 நிமிடங்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதிபடுத்தும் வகையில் சம்பந்தப்பட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில். மொத்தம் 5 ஆயிரத்து 100 பறக்கும் படைகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இதுஅல்லாது நிலையான 5 ஆயிரத்து 200 கண்காணிப்புக் குழுக்களும் பணியில் ஈடுபடுத் பட்டுள்ளனர்.

<u>புதுச்சேரி-தேர்தல்</u>

புதுச்சேரியில் ஏப்ரல் 9-ஆம் தேதி நடைபெற்ற உள்ள சட்டமன்ற தேர்தலுக்கான தேர்தல் அறிவிக்கை இன்று வெளியிடப்பட்டு வேட்புமனு தாக்கல் தொடங்கி உள்ளது. 1951-ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 15-ஆவது பிரிவின் கீழ் இதற்கான அரசிதழ் அறிவிக்கை இன்று வெளியிடப்பட்டது. யூனியன் பிரதேசத்தில் மொத்தம் 17 மையங்களில் உள்ள, 17 தேர்தல் நடத்தும் அதிகாரிகளிடம் வரும் 23-ஆம் தேதி வரை, சட்டமன்ற தேர்தலுக்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்யலாம். அதற்கு மறுநாள் 24-ஆம் தேதி, வேட்புமனு பரிசீலனை நடைபெறும். ஏற்கப்பட்ட

மனுக்களை விலக்கிக் கொள்ள மார்ச் 26-ஆம் தேதி வரை அவகாசம் அளிக்கப்படும்.

இதற்கிடையே புதுச்சேரியில் இதுவரை எந்த ஒரு கட்சியும் வேட்பாளர் பட்டியலை அறிவிக்கவில்லை. அடுத்த 2 நாட்களில் வேட்பாளர்கள் அறிவிக்கப்படலாம் என்றும் அதன்பின் வேட்பாளர்கள் மனு தாக்கல் செய்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மனுதாக்கல் மையங்களில் அதிகாரிகள் தயார் நிலையில் உள்ளனர். தேர்தல் நடைமுறைகள் குறித்து இவர்கள், அரசியல் கட்சி பிரதிநிதிகளிடம் எடுத்துக் கூறி உள்ளனர்.

<u>புதுச்சேரி-நெறிமுறை</u>

புதுச்சேரியில் நேற்று சட்டமன்ற தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டது முதல், தேர்தலுக்கான மாதிரி நடத்தை நெறிமுறைகள் உடனடியாக அமலுக்கு வந்துள்ளன. தேர்தலை சுமுகமாக நடத்தும் வகையிலும் சட்டம்-ஒழுங்கை பராமரிக்கும் வகையிலும் தேர்தல் ஆணைய அறிவுறுத்தலின் பேரில் பலவித கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

புதுச்சேரியில் போலிசார் மற்றும் துணை ராணுவப் படையினர் மாநில எல்லைகளில் வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். அரசுக் கட்டிடங்கள் மற்றும் தனியார் கட்டிடங்களில் சுவர் விளம்பரங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆயினும் SVEEP திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு கட்டுப்பாடுகளில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி சட்டமன்றத்தில், அமைச்சர்கள் மற்றும் எம்எல்ஏ-க்களின் அலுவலகங்கள் அனைத்தும் காலி செய்யப்பட்டு பூட்டப்பட்டன. அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் அரசுக் கார்களை அரசிடமே ஒப்படைத்து வருகின்றனர். காரைக்காலில் தேர்தல் நடத்தை நெறிமுறைகளின் முறையாக அமலாக்கம் குறித்து மாவட்ட ஆட்சியரும் மாவட்ட தேர்தல் அதிகாரியுமான திருமதி இஷிதா ராட்டி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி

பிரதிநிதிகளுடன் ஆலோசனை கூட்டம் நடத்தினார். மாவட்டத்தைச் சேர்ந்த வங்கி மேலாளரையும் அவர் சந்தித்து ஆலோசனை மேற்கொண்டார். ஏனாமில் 100 சதவிகிதம் வெளிப்படையான முறையில் தேர்தலை நடத்த தாம் உறுதி பூண்டுள்ளதாக ஏனாம் தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அதிகாரி திரு சிவராஜ் மீனா செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார்.

<u>தமிழ்நாடு-நெறிமுறை</u>

ஏப்ரல் 23-ஆம் தேதி சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ள தமிழகத்திலும் தேர்தலுக்கான மாதிரி நடத்தை நெறிமுறைகள் நேற்று முதல் அமலுக்கு வந்துள்ள நிலையில் பாதுகாப்பு வலுப்படுத்தப் பட்டுள்ளது. பல்வேறு மாவட்டங்களில் பாதுகாப்பு படையினர் கொடி ஊர்வலங்களை நடத்தி வருகின்றனர். பறக்கும் படையினரின் வாகன சோதனையின் போது பல லட்ச ரூபாய் ரொக்கப் பணம் கைப்பற்றப்பட்டுள்ளது. சிறு வணிகர்கள் பணம் எடுத்துச் செல்லும் போது உரிய ஆவணங்களை வைத்திருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<u>தேர்தல் மேற்கு வங்கம்</u>

இதற்கிடையே, ஏப்ரல் 9-ஆம் தேர்தல் நடைபெற உள்ள கேரளா மற்றும் அசாமிலும் இன்று வேட்புமனுதாக்கல் தொடங்கி உள்ளது. தேர்தல் நடைபெற உள்ள மற்றொரு மாநிலமான மேற்கு வங்கத்தில், காவல்துறை தலைவர், கொல்கத்தா காவல் துறை ஆணையர் உள்ளிட்ட 4 மூத்த காவல்துறை அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

ஒடிசா தீ விபத்து

ஒடிசா மாநிலம் கட்டாக்-கில் உள்ள SCB மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் தீவிர விபத்து சிகிச்சை பிரிவில் இன்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில், பலர் உயிரிழந்தது குறித்து குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் துயரம் வெளியிட்டு உள்ளனர். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 2 லட்சம் ரூபாயும், காயம் அடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்துள்ளார். ஒடிசா முதலமைச்சர் திரு மோகன் சரண் மாஜி, மருத்துவமனைக்கு நேரில் சென்று நிலவரங்களை ஆய்வு செய்தார். அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சையில் இருந்த 10 பேர் இந்த தீவிபத்தில் உயிர் இழந்தனர். மின்சார கோளாறு காரணமாக விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

மதுவா-மோடி

பக்தியும் கண்ணியமான சமத்துவ வாழ்க்கையும் அனைவருக்கும் பொதுவானதே என்பதை வலியுறுத்தும் மதுவா மத சம்பிரதாயத்தை நிறுவிய பூர்ண பிரம்மஸ்ரீ ஹரிசந்த் தாக்கூர் ஜெயந்தி இன்று மதுவா தர்ம மகா மேளாவாக கொண்டாடப்படுவதை ஒட்டி, மேற்கு வங்கத்தில் அதிகம் உள்ள மதுவா சமூகத்தினருக்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். நாட்டின் ஆன்மிக வலுவை பிரதிபலிக்கும் வகையிலான மதுவா சமூகத்தினரின் கலாச்சார மரபுகள், சமத்துவம் மீது நாட்டிற்கு உள்ள நம்பிக்கைக்கு சான்றாகவும் அமைந்திருப்பதாக பிரதமர் தெரிவித்துள்ளார். கடந்த 10 ஆண்டுகளில் மத்திய அரசு, மதுவா சமூகத்தினரின் நல மேம்பாட்டில், மிகுந்த கவனம் செலுத்தி வந்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பணவீக்கம்

இவ்வாண்டு பிப்ரவரி மாதத்தில், மொத்த விலைகளின் அடிப்படையிலான பணவீக்கம், கடந்த ஆண்டு பிப்ரவரியுடன் ஒப்பிடுகையில் 2.13 சதவிகிதம் அதிகரித்துள்ளது. ஆயினும் இவ்வாண்டு ஜனவரியில் பதிவான மொத்த விலை பணவீக்கத்துடன் ஒப்பிடுகையில் இது, 0.25 சதவிகிதம் குறைவு தான் என்று, மத்திய அரசு வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களில் தெரிய வந்துள்ளது.

## போட்டித் திறன்

போட்டித் திறன் சட்டத்தின் பொருளியல் அடிப்படைகள் என்பது குறித்து இந்திய போட்டித் திறன் ஆணையம் சார்பில் புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, 11-ஆவது தேசிய மாநாட்டை, நிதி ஆயோக் உறுப்பினர் திரு ராஜீவ்கவ்பா தொடக்கி வைத்தார். சந்தையில் போட்டி இருந்தால் தான் செயல்திறன் வலுவடைந்து புதுமை படைப்புகள் உருவாகும் என்று நுகர்வோருக்கான விருப்ப தேர்வுகள் அதிகரிக்கும் என்றும் அவர் கூறினார். போட்டித் திறன் சட்டத்தினால் சிறு வணிகர்களுக்கான வாய்ப்புகள் அதிகரிக்கவும் உலக அளவிலான பொருள் விநியோகச் சங்கிலியில் நாட்டை ஒருங்கிணைக்கவும் ஏதுவாகும் என்று அவர் தெரிவித்தார்.

## இ-சைக்கிள்

உள்ளூர் போக்குவரத்தில் மின்சார சைக்கிள்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பது குறித்து புதுடெல்லியில் இன்று நடைபெற்ற தேசிய பயிலரங்கை மத்திய ஊரக வளர்ச்சித் துறை இணை அமைச்சர் திரு கம்லேஷ் பாஸ்வான் தொடக்கி வைத்தார். இ-சைக்கிள் பயன்பாட்டை ஊக்குவிப்பதன் மூலம் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை

வலுப்படுத்தவும், மகளிர் அதிகாரப் பங்கேற்பை மேம்படுத்தவும் ஏதுவாகும் என்று அவர் கூறினார். பெண்களை மையமாக கொண்ட பல்வேறு நலத்திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாக மத்திய அமைச்சர் தெரிவித்தார். மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு இ-சைக்கிள் வழங்குவதற்கான அரசின் முன்னோடி திட்டத்தினால் இவர்கள் புதிய சந்தை வாய்ப்புகளை எட்டவும், வாழ்வாதாரத்தை வலுப்படுத்திக கொள்ளவும் ஏதுவாகும் என்று கூறினார். மத்திய ஊரக வளரச்சித் துறை அமைச்சகமும், கன்வர்ஜென்ஸ் எனர்ஜி நிறுவனமும் இணைந்து அமல்படுத்தும் ஸ்திரி திட்டத்தின் கீழ், சுமார் 800 பெண்களுக்கு இந்நிகழ்ச்சியின் போது மின்சார சைக்கிள் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் தாக்கங்கள் பற்றிய மதிப்பீட்டு அறிக்கை ஒன்றையும் விழாவில் அமைச்சர் வெளியிட்டார்.

வானிலை

இன்று மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தென்தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் லேசான மழை பெய்யக் கூடும் என்றும், தமிழகத்தின இதரப் பகுதிகள் மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவும் என்றும் நாளை மறுநாள் 18-ஆம் தேதி முதல், வரும் 21-ஆம் தேதி வரை புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் லேசான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் குறைந்த பட்ச வெப்பநிலையில் குறிப்பிடத் தக்க மாற்றம் எதுவும் இருக்கவில்லை. கொடைக்கானலில் 8.8 டிகிரி செல்சியஸ் குறைந்த பட்ச வெப்பநிலை பதிவாகி உள்ளது..

## உண்மை அறிதல்

ஜம்மு-காஷ்மீரின் பாராமுல்லா பகுதியில் இந்திய ராணுவத்தினர் தீவிரவாதிகளால் தாக்கப்பட்டதாக சமூக ஊடகத்தில் வெளியாகி உள்ள செய்தி போலியானது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. இந்திய ராணுவத்தினர் தாக்கப்பட்டதாக எந்த தகவலும் இல்லை என்று பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் உண்மை அறியும் பிரிவு கூறி உள்ளது. சந்தேகத்திற்கு இடமான இத்தகைய செய்திகள் குறித்து, பொது மக்கள், fact_check@pib.gov.in என்ற மின்னஞ்சல் முகவரியில் தெரிவிக்கலாம் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.